**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**

**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No: 258/2025**

**Dated: 18.06.2026**

**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.கார்த்திக்செல்வம்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Tr.Vinothkumar,Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023

**எதிரி ஆஜாப்டுததப்பட்டார். இரு தரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card. Aathar card of the Witness verified.**

**முதல் விசாரணை தொடர்ச்சி:**

பின்பு நாங்கள் அனைவரும் சேர்ந்து மேற்கூறிய இடத்திற்கு சென்று கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு கொண்டிருந்தோம். சாலையின் இரு திசைகளிலும் வந்து கொண்டிருந்த வாகனங்களை தீவிரமாக கவனித்து கொண்டிருந்தோம். பின்பு சுமார் 20.45 மணியளவில் ரகசிய தகவலில் கூறிய அதே வாகன பதிவெண் கொண்ட Toyato Camry என்ற வாகனமான புதுக்கோட்டை To மதுரை செல்லும் ரோட்டில் சாலையின் இடது புறமாக வந்து நின்றது. வாகனத்திலிருந்து குட்டையான உயரமும் மெல்லிய உடல் அமைப்பும் கொண்ட ஒரு நபர் இறங்கி சாலை ஒரத்தில் இருந்த முட்புதர் மற்றும் புல்வெளி பகுதிக்குள் சென்றார். அவர் முட்புதர் மற்றும் புல் வெளி பகுதியில் தேடி ஒரு துணிப்பையை கையில் எடுத்து கொண்டு வாகனத்தை நோக்கி

நடந்து வந்தார். உடனே நாங்கள் அனைவரும் அவரை அணுகினோம். நாங்கள் அனைவரும் அவரை சுற்றி வளைத்து நான் எனது அடையாள அட்டையை அவரிடம் காண்பித்து என்னை அவரிடம் அறிமுகம் செய்து கொண்டேன். பின்பு அவரிடம் நான் அவரை பற்றி விசாரித்தேன். அப்போது அவர் தனது பெயர் அலெக்ஸ் என்றும் தனது தகப்பனார் பெயர் மகாலிங்கம் என்றும் தனது ஊர் விழுந்தமாவடி என்றும் நாகப்பட்டிணம் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் எங்களிடம் கூறினார். பின்பு நான் அவரிடம் என்னிடம் இருந்த ரகசிய தகவலை அவரிடம் கூறி ஏதேனும் போதை பொருளை மறைத்து வைத்துள்ளீர்களா என்று கேட்டேன். அதை ஏற்று அவர் தான் கையில் இருந்த துணி பையில் இருந்த கருப்பு பாலித்தீன் கவரை எடுத்து காட்டினார். பின்பு அவரிடம் NDPS சட்டபிரிவு 50 பற்றி விளக்கி கூறி சாட்சிகள் முன்னிலையில் நோட்டீஸ் ஒன்று சார்வு செய்தேன். அந்த NDPS சட்டபிரிவு 50 படியான நோட்டீஸ்சை பெற்றுக் கொண்டு தன்னை வேறு எந்த அதிகாரிகளும் சோதனை செய்ய தேவையில்லை என்று மறுப்பு தெரிவித்து தாங்களே என்னை சோதனை செய்து கொள்ளலாம் என்று கூறினார். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சோதனை சம்மத கடிதம் தான் அந்த அறிவிப்பாகும். **அந்த சோதனை சம்மத கடிதம் பிரிவு 50-ன்கீழான அறிவிப்பு அதசாஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு எதிரி என்னிடம் அவர் வைத்திருந்த பையில் இருந்த கருப்பு பாலித்தீன் கவரிலிருந்து oats பேக்கிங் கவரால் சுற்றப்பட்ட பழுப்பு நிற டேப்பால் ஒட்டப்பட்ட ஒரு பார்சலை தாமாக முன்வந்து எதிரி என்னிடம் ஒப்படைத்தார். நான் அந்த பார்சலை பிரித்து திறந்து பார்த்தபோது பழுப்பு நிற டேப்பால் ஒட்டப்பட்ட இரண்டு கருப்பு பாலித்தீன் பார்சல் கவர்கள் இருந்தன. அதில் ஒரு கருப்பு நிற பார்சலை பிரித்து திறந்து பார்த்தபோது பழுப்பு நிற டேப்பால் ஒட்டப்பட்ட Transparent பாலித்தீன் கவரில் white crystalline போன்ற பொருட்கள் இருந்தது கண்டறியப்பட்டது. நான் அந்த Transparent

பாலித்தீன் கவரை சிறிய கத்தியால் கட் செய்து ஒப்பன் செய்து பார்த்து அதில் சிறிதளவு எடுத்து நான் கொண்டு வந்து இருந்த DD Kit-ல் வைத்து சோதனை செய்து பார்க்க அது Amphetamine என்ற போதை பொருளுக்கு பொறுத்தமான விடையளித்தது. பின்பு மற்றொரு கருப்பு நிற பார்சலை பிரித்து திறந்து பார்த்தபோது பழுப்பு நிற டேப்பால் ஒட்டப்பட்ட Transparent பாலித்தீன் கவரில் white crystalline போன்ற பொருட்கள் இருந்தது கண்டறியப்பட்டது. நான் அந்த Transparent பாலித்தீன் கவரை சிறிய கத்தியால் கட் செய்து ஒப்பன் செய்து பார்த்து அதில் சிறிதளவு எடுத்து நான் கொண்டு வந்து இருந்த DD Kit-ல் வைத்து சோதனை செய்து பார்க்க அது Amphetamine என்ற போதை பொருளுக்கு பொறுத்தமான விடையளித்தது. அந்த இரண்டு Transparent பாலித்தீன் கவர்களிலும் இருந்த white crystalline போன்ற பொருட்கள் நிறம், அமைப்பு, இயற்பியல் மற்றும் ரசாயனம் பண்புகள் போன்ற அனைத்து பண்புகளிலும் ஒரே மாதிரியாக இருந்தது. அதனால் அந்த இரண்டு Transparent பாலித்தீன் கவர்களிலும் இருந்த white crystalline போன்ற பொருட்களை ஒரே Transparent பாலித்தீன் கவரில் போட்டு heat sealed செய்தேன். அவ்வாறு heat sealed செய்த Transparent பாலித்தீன் கவரை எடை போட்டு பார்க்க 950 கிராம் (In net) ஆக இருந்தது. பின்பு மேற்படி heat sealed Transparent பாலித்தீன் கவரை ஒரு green கலர் cloth கவரில் உள்ளே போட்டு ஒட்டி NCB seal No.12 என சீலிட்டு P1 என குறியீடு செய்தேன். பின்பு போதை பொருளை மறைத்து வைத்து எடுத்து வர எதிரி பயன்படுத்திய துணி பை, கருப்பு பாலித்தீன் கவர், oats பேக்கிங் கவர், Transparent பாலித்தீன் கவர், பழுப்பு நிற ஒட்டும் டேப்பு ஆகியவற்றை ஒரு Transparent பாலித்தீன் கவரின் உள்ளே வைத்து heat sealed செய்தேன். அவ்வாறு heat sealed செய்த Transparent பாலித்தீன் கவரை ஒரு green கலர் cloth கவரில் உள்ளே போட்டு ஒட்டி NCB seal No.12 என சீலிட்டு P2 என குறியீடு செய்தேன். பின்பு எதிரி தாமாக முன்வந்து ஒப்படைத்த

இந்திய ரூபாயை மகஜரில் கைப்பற்றினேன். அவர் ஒப்படைத்த இந்திய ரூபாயை எண்ணி பார்க்க ரூ.2 லட்சம் இருந்தது. (500x400) மேற்படி இந்திய ரூபாய்களை Transparent பாலித்தீன் கவரில் போட்டு heat sealed செய்தேன். அவ்வாறு heat sealed செய்த Transparent பாலித்தீன் கவரை ஒரு green கலர் cloth கவரில் உள்ளே போட்டு ஒட்டி NCB seal No.12 என சீலிட்டு P3 என குறியீடு செய்தேன். மேலும் TN 51 BA 0007 என்ற வாகன பதிவெண் கொண்ட Toyato Camry என்ற வாகனத்தை NDPS Act 1985-ன்படி மகஜரில் கைப்பற்றினேன். பின்பு அந்த இடத்திலேயே நான் கொண்டிருந்த மடிகணிணி மூலம் மகஜர் தயார் செய்து பிரிண்ட் எடுத்து மகஜர் மற்றும் அதனுடன் இணைந்த வழக்கு சொத்துக்களிலும் நான், சாட்சிகள் மற்றும் அலெக்ஸ் என்பவரும் கையொப்பம் செய்தோம். மகஜரின் கடைசி பக்கத்தில் NCB Seal No.12 இடப்பட்டது. மகஜரின் ஒரு நகலானது அலெக்ஸ் என்பவருக்கு வழங்கப்பட்டது. மேற்படி பறிமுதல் நடவடிக்கையானது 14.04.2025-ம் தேதி 1.30 மணியளவில் நிறைவு பெற்றது. என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் **மகஜர் அதசாஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அலெக்ஸ் என்பவரை விசாரணைக்கு ஆஜராக வேண்டி அன்றைய தினமே NDPS சட்ட பிரிவு 67ன்கீழ் ஒரு சம்மன் வழங்கப்பட்டது. அந்த **சம்மன் அதசாஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சம்மனை பெற்றுக் கொண்டு ஆஜரான அவரிடம் வாக்குமூலம் தயார் செய்தேன். வாக்குமூலத்தின் அடிப்படையில் அண்ணன் என்ற பெயரில் போதை பொருள் சம்பந்தமாக வாட்செப்பில் பேசிய Conversation னை ஸ்கிரின் சாட் செய்தும் அவர் பயன்படுத்திய 3 செல்போன்களையும் அவர் தானாக முன்வந்து என்னிடம் ஒப்படைத்தார். அவர் ஒப்படைத்த 3 செல்போன்களையும் தனிதனி Transparent பாலித்தீன் கவரில் போட்டு

heat sealed செய்தேன். அவ்வாறு தனிதனியே heat sealed செய்த Transparent பாலித்தீன் கவரை தனித்தனி green கலர் cloth கவரில் உள்ளே போட்டு ஒட்டி NCB seal No.12 என சீலிட்டு M1, M2, M3 என குறியீடு செய்தேன். பின்பு எதிரி கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையிலும் அவரிடமிருந்து போதை பொருள் கைப்பற்றப்பட்ட காரணத்தினாலும் அன்றைய தினம் 14.04.2025-ம் தேதி 16.00 மணிக்கு எதிரியை காரணம் கூறி கைது செய்தேன். கைது நடவடிக்கையின் போது கைதிற்காக காரணம் விளக்கி கூறப்பட்டது. கைது நமுனா அவருக்கு தனியாக சார்வு செய்யப்பட்டது. அந்த **கைது நமுனா அதசாஆ.5** ஆக குறியீடு செய்யப்பட்டது. பின்பு எதிரியை புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தினேன். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் மருத்துவ சான்று தான் எதிரிக்கு புதுக்கோட்டை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவர் வழங்கிய மருத்துவ பரிசோதனை சான்று ஆகும். அந்த **மருத்துவ பரிசோனை சான்று அதசாஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்த வேண்டி JM II புதுக்கோட்டை அவர்கள் முன்பு ஆஜர் செய்தேன். அந்த **Remand Application அதசாஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதனை தொடர்ந்து கைப்பற்றப்பட்ட போதை பொருட்களிலிருந்து மாதிரிகள் எடுக்க வேண்டி Affidavit, petition, Annexure I, Annexure II, Inventory of seized conveyance மற்றும் test memo ஆகியவற்றையும் அவர்களிடத்தில் சமர்ப்பித்தேன். அதற்கான கைப்பற்றப்பட்ட போதை பொருட்களிலிருந்து மாதிரிகள் எடுக்க வேண்டி நீதித்துறை நடுவர் முன்பாக சமர்ப்பித்த **Affidavit மற்றும் petition அதசாஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **Inventory** எடுத்த வகைக்கு நீதித்துறை நடுவர் வழங்கிய **Annexure I அதசாஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **Annexure II அதசாஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. Inventory of seized conveyance **அதசாஆ.11** ஆக குறியீடு

செய்யப்படுகிறது. test memo **அதசாஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 15.04.2025-ம் தேதி வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் மற்றும் வாகனம் TN 51 BA 0007 Toyato Camry JM II புதுக்கோட்டை அவர்களிடம் ஒப்படைத்து கைப்பற்றப்பட்ட போதை பொருள்களிலிருந்து மாதிரிகள் S1, S2 மற்றும் CS1 மாதிரிகள் எடுக்கப்பட்டன. பின்பு பறிமுதல் மற்றும் கைது நடவடிக்கைகளை நிறைவு செய்ததற்கு NDPS சட்டம் பிரிவு 57-ன்கீழ் ஒரு விரிவான அறிக்கையை கண்காணிப்பாளர் அவர்களுக்கு சமர்ப்பித்தேன். அந்த பிரிவு NDPS சட்டம் பிரிவு 5**7-ன்கீழ் ஒரு விரிவான அறிக்கை அதசாஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கின் விசாரணைக்கு வேண்டி பழைய கந்தர்வக்கோட்டை டோல் பிளாசாவிலுள்ள CCTV footage சேமித்து வைக்கும் NVR வேண்டி டோல் மேலாளருக்கு ஒரு கடிதம் என்னால் கொடுக்கப்பட்டது. அந்த கடிதத்தினை Toll Manager பெற்றுக் கொண்டு ஒப்புகை செய்து கொடுத்துள்ளார். **அந்த கடிதம் அதசாஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களை அதன் பாதுகாப்பு கருதி NCB மதுரை குடோணில் வைக்க ஒரு பார்வெடிங் மெமோ தயார் செய்தேன். அந்த **பார்வெட்டிங் மொமோ அதசாஆ15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சொத்துக்களை NCB மதுரை குடோணில் ஒப்படைத்ததற்கு குடோண் ரசீது பெற்றேன். அந்த **குடோண் ரசீது அசதாஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு மீண்டும் 17.04.2025-ம் தேதி வழக்கின் விசாரணைக்கு வேண்டி பழைய கந்தர்வக்கோட்டை டோல் பிளாசாவிலுள்ள CCTV footage சேமித்து வைக்கும் NVR வேண்டி டோல் மேலாளருக்கு ஒரு கடிதம் என்னால் கொடுக்கப்பட்டது. அந்த **கடிதம் அசதாஆ.17** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடிதம் பெற்றுக் கொண்டு Toll Plaza manager திரு.காஜா முகைதீன் 17.04.2025-ம் தேதி தானாக முன்வந்து ஒப்படைத்த NVR -ஐ அந்த இடத்தில் இருந்த சம்பவ சாட்சிகளை பொறுத்து அவர்களை அங்கு சாட்சியாக இருக்க

அழைத்ததன் பேரில் வந்த அந்த சாட்சிகளாகிய 1) முரளி, VAO, பெரியகோட்டை, பழைய கந்தர்வக்கோட்டை (பொறுப்பு), 2) பம்பையன், Village Assistant ஆகியோர்கள் இருவரும் சாட்சியாக இருக்க முன்வந்தார்கள். அவர்கள் முன்னிலையில் 19.00 மணி முதல் 19.30 மணி வரை NVR-ஐ கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றினேன். அதற்கான கைப்பற்றுதல் மகஜரில் சாட்சிகளாக முரளி மற்றும் பம்பையன் ஆகியோர்கள் கையொப்பம் செய்தார்கள். அதற்கான **கைப்பற்றுதல் மகஜர் அசதாஆ.18** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு நான் கைப்பற்றிய NVR-ஐ brown carton box-ல் உள்ளே வைத்து அதை மீண்டும் White plastic சாக்கு பையில் உள்ளே வைத்து துணி நாடாவில் தைத்து NCB Seal NO.12 என Seal லிட்டு NVR என குறியீடு செய்தேன். பின்பு Toll Manager திரு.காஜா மைதீன் என்பவருக்கு NDPS சட்ட பிரிவு 67ன்கீழ் ஒரு சம்மன் வழங்கினேன். அந்த NDPS சட்ட பிரிவு 67ன்கீழான சம்மனை பெற்றுக் கொண்டு ஒப்புகை செய்துள்ள **சம்மன் நகல் அதசாஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் வழங்கிய சம்மனை பெற்றுக் கொண்டு விசாரணைக்கு ஆஜரான திரு.காஜா மைதீன் என்பவர் தானாக கொடுத்த எழுத்து மூலமான வாக்குமூலத்தை பெற்றேன். அந்த திரு.காஜா மைதீன் கொடுத்த வாக்குமூலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அவரிடம் நான் கைப்பற்றிய NVRஐ பாதுகாப்பு கருதி மதுரை NCB குடோனில் ஒப்படைக்க ஒரு Forwarding memo தயார் செய்தேன். அதற்கான **Forwarding memo அசதாஆ.20** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு அவ்வாறு NVRஐ ஒப்படைத்ததற்கு குடோன் ரசீது பெற்றேன். அந்த **குடோண் ரசீது அசதாஆ.21** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு வழக்கில் கைப்பற்றப்பட்ட NVRஐ இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டி மெமோ ஒன்றை 18.04.2025-ம் தேதி E -filling செய்தேன். அந்த E -filling செய்ததற்கான மெமோ மற்றும் ஒப்புகை ரசீது **அசதாஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 21.04.2025-ம் தேதி மற்ற வழக்கு சொத்துக்களை

நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டி இந்நீதிமன்றத்தில் மெமோ தாக்கல் செய்தேன். அந்த **மெமோ அசதாஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு 23.04.2025-ம் தேதி வழக்கு சொத்துக்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்து RP No.133/2025 பெற்றேன். பின்பு எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட இந்திய ரூபாய் 2 லட்சத்தை நீதிமன்ற உத்தரவுப்படி SBI வங்கி கணக்கில் நீதிமன்றத்தில் டெபாசிட் செய்யப்பட்டது. அந்த டெபாசிட் செய்யப்பட்டதற்கான **வங்கி ரசீது நகல் அசதாஆ.24** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்நீதிமன்ற உத்தரவுப்படி மாதிரியை Customs Lab, Chennai-க்கு அனுப்பி வைத்தேன். மேலும் NVR ஐ நீதிமன்ற உத்தரவுப்படி CFSL, ஹைதராபாத் Lab-க்கு அனுப்பி வைத்தேன். பின்பு 24.04.2025-ம் தேதி வழக்கின் சொத்துக்களை அதன் பாதுகாப்பு கருதி சென்னை NCB குடோணில் வைக்க வேண்டி ஒரு Farwarding memo தயார் செய்தேன். அந்த **Farwarding memo அசதாஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு நான் அந்த வழக்கு சொத்துக்களை ஒப்படைத்து குடோண் ரசீது பெற்றேன். அந்த **குடோண் ரசீது அசதாஆ.26** ஆக குறியீடு செய்யப்படுகிறது. heat sealed Transparent பாலித்தீன் கவரை ஒரு green கலர் cloth கவரில் உள்ளே போட்டு ஒட்டி NCB seal No.12 என சீலிட்டு P1 என குறியீடு செய்யப்பட்டது குறித்த புகைப்படம் நீதித்துறை நடுவரின் சான்றொப்பத்துடன் கூடிய **புகைப்படம் அதசாஆ.27** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (புகைப்படத்தினை குறியீடு செய்ய எதிரி தரப்பில் அதற்கு 63 BSA சட்டத்தின் பிரகாரம் சான்று இல்லை என ஆட்சேபிக்கப்பட்டது. அந்த புகைப்படம் நீதித்துறை நடுவர் முன்பாக தடய சொத்தினை ஆய்வு செய்து எடுக்கப்பட்ட புகைப்படம், அதனை நீதித்துறை நடுவர் புகைப்படத்தின் பின்பக்கம் கையொப்பம் செய்துள்ளார். அதில் நீதிமன்றத்தின் சீலும் உள்ளது. ஆகவே அதனை குறியீடு செய்ய அதற்கு பிரிவு 63 BSA சான்று கட்டாயம் என கூற இயலாது. ஆகவே எதிரி தரப்பு ஆட்சேபனை ஏற்கப்படவில்லை.) அந்த புகைப்படத்தில் காணப்படும்

என்னால் எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட **Amphetamine சா.பொ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட P1 ஐ எதிரி சுற்றி வைத்திருந்த துணி பை, கருப்பு பாலித்தீன் கவர், oats பேக்கிங் கவர், Transparent பாலித்தீன் கவர், பழுப்பு நிற ஒட்டும் டேப்பு ஆகியவற்றை ஒரு Transparent பாலித்தீன் கவரின் உள்ளே வைத்து heat sealed செய்தேன். அவ்வாறு heat sealed செய்த Transparent பாலித்தீன் கவரை ஒரு green கலர் cloth கவரில் உள்ளே போட்டு ஒட்டி NCB seal No.12 என சீலிட்டு P2 என குறியீடு செய்தேன். அந்த **P2 சா.பொ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டும் நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யப்பட்டுள்ள பணம் ரூ.2 லட்சம் பொறுத்து அதன் **புகைப்படங்கள் (எண்ணிக்கை 20) அதசாஆ.28 வரிசையாக** குறியீடு செய்யப்படுகிறது. **M1, M2, M3 என மேலே குறிப்பிடப்பட்டுள்ள செல்போன்கள் முறையே சா.பொ.3 முதல் 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.அவற்றின் **புகைப்படங்கள் (எண்ணிக்கை 3) அதசாஆ.29** ஆக வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. நீதித்துறை நடுவர் முன்பாக மாதிரிகள் CS1, S1, S2-ல் நீதிமன்றத்தின் மூலம் பகுப்பாய்வுக்கு Customs Lab, Chennai க்கு அனுப்பப்பட்டு அங்கு பரிசோதனைக்கு பிறகு அனுப்பப்பட்ட ஆய்வுக்கு பயன்படுத்தப்பட்டு மீதமுள்ள **Amphetamine ஆகியவை முறையே சா.பொ 6 முதல் 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நீதித்துறை நடுவர் முன்பாக மாதிரிகள் CS1, S1, S2-ல் நீதிமன்றத்தின் மூலம் பகுப்பாய்வுக்கு என மாதிரி எடுக்கப்பட்டது குறித்த **புகைப்படங்கள் (எண்ணிக்கை 5) அதசாஆ.30** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதிரி ஓட்டி வந்த Toyato Camry என்ற வாகனத்தினை பல்வேறு கோணங்களில் நீதித்துறை நடுவர் முன்பாக எடுக்கப்பட்ட **5 புகைப்படங்கள் அதசாஆ.31** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. நீதித்துறை நடுவர் முன்பாக P1 to P3 Properties குறித்து எடுக்கப்பட்ட புகைப்படங்கள் (எண்ணிக்கை 3) **அதசாஆ.32**

வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. நீதித்துறை நடுவர் முன்பாக எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட Amphetamine -லிருந்து Samples எடுக்கப்பட்டதற்கான **புகைப்படங்கள் 5 அதசாஆ.33** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. இந்நீதிமன்றத்திலிருந்து Toll plaza NVR இந்நீதிமன்றத்தின் மூலம் CFSL ஹைதராபாத்திற்கு அனுப்பப்பட்டது குறித்ததான புகைப்படங்கள் (எண்ணிக்கை 4) **அதசாஆ.34** வரிசையாக குறியீடு செய்யப்படுகிறது. எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்ட **Toyato Camry கார் சா.பொ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.